DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

...

IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM

Sessions Case No. ;SC.NO .47/20

Calender Case No. ;

Primary Register Case No;

Deposition of Witness for :Prosecution P.W10

Defence

Court

Name : Dr. Narenkumar

Father's Name :

Age :

Religion :

Calling :

Address :

Phone /Mobile No. :

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of 7th day of July, 2023.

Accused and his counsel present.

முதல் விசாரணை =

நான் காஞ்சிபுரம் அரசு மருத்தவமனையில் உதவி அறுவை சிகிச்சை நிபுணராக பணிபுரிந்து வருகிறேன். 14.11.19 அன்று நான் அரசு பொது மருத்துவமனையில் அவசர சிகிச்சை பீரிவில் மருத்துவராக பணிபுரிந்து வந்த போது காலை 10.40 மணிக்கு ராஜேந்திரன் என்பவரை அவருடைய மகன் சண்முகம் என்பவர் அவசர சிகிச்சை பிரிவுக்கு அழைத்து வந்தனர். அவர் தன்னை தெரிந்த நபர் மணிகண்டன் என்பவர் கூர்மையான ஆயுதத்தால்

தலையில் தாக்கியதாக சொன்னார். அவருக்கு தலையின் இடது பின்பக்கத்தில் 7 x1 செ.மீ. வெட்டப்பட்,ட ஆழமான காயம் இருந்தது. அவருக்கு முதல் உதவி சிகிச்சையாக தையல் போட்டேன் . அவரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு இருக்க சொன்னபோது அவர் விருப்பம் இல்லை என்று சொன்ன காரணத்தினால் அவரை மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்தேன். அவர் மேல்சிகீச்சையை முடித்துவிட்டு என்னிடம் கா. ஆய்வாளர் கருத்துரை கேட்டபோது அசா2க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்றளித்தேன். நான்வழங்கிய விபத்து பதிவேடு கருத்துரையுடன் கூடியது அ.சா.ஆ.2 ஆகும். இது தொடர்பாக கா.ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை=

அ.சா.2 விபத்து பதிவேட்டில் ஆஜர் ஆன நேரமும், எவ்வகையில் காயம் ஏற்பட்டது என்ற விவரம் அடித்தல் திருத்தலுடன் உள்ளது என்றால் சரிதான். அவசர சிகிச்சை பிரிவில் பல நோயாளிகள் அனுமதிக்கப்பட்டிருக்கும்போது முதலுதவி அனைவருக்கும் அவசியம் என்ற காரணத்தினால் அந்த அவசரத்தில் மாற்றி எழுதிவிட்டு அதனை சரிசெய்யும் பொருட்டு தான் அந்தஅடித்தல் திருத்தல் ஏற்பட்டது. காயத்தின் த்ன்மை மற்றும் அளவு நான் பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. அச.ா.2 க்கு ஏற்பட்ட காயம் ஒரு நபர் வேகமாக இருசக்கர வாகனத்தில் சென்று கூர்மையான பொருட்கள் மீதோ கல்லின் மீதோ ஒரு இரும்பின் மீதோ விழும்போது அது போல் ஏற்பட வாய்புள்ளதா என்றால் இல்லை. நான் விபத்து பதிவேட்டில் காயத்தின் தன்மை குறித்து காயம் குறித்தோ அளவு குறித்தோ குறிப்பிடாதா காரணத்தினாலோ அடித்தல் திருத்தலுடன் விபத்து பதிவேடு தயார் செய்த காரணத்தினால் போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க அசா.2 க்கு கூர்மையான ஆயுதத்தால் காயம் ஏற்பட்டதாக ் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறாகும்.

மறு விசாரணை = இல்லை

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

...

IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM

Sessions Case No. ;SC.NO .47-20

Calender Case No. ;

Primary Register Case No;

Deposition of Witness for :Prosecution P.W/11

Defence

Court

Name : Pazhani

Father's Name :

Age :

Religion :

Calling :

Address :

Phone /Mobile No. :

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of 7th day of July, 2023.

Accused and his counsel present

முதல் விசாரணை =

நான் தாமல் கிராமம் பாட்டை தெருவில் குடியிருந்து மரம் வெட்டும் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்பாடும்

பார்வை மகசரில் உள்ள 2ம் கையெழுத்து என்னுடையது கிடையாது. இவழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத அனுமதி கோர அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை/</u>

14..11.2019 அன்று மதியம் 1 மணியளவில் பாலுசெட்டி சத்திரம் கா.ஆய்வாளர் சென்னை பெஙகளுர் தேசிய நெடுஞ்சாலையில் பொன்னியம்மன் பட்டறை ச்ந்த்திப்பு அருகில் சம்பவ இடத்தில் பார்வையிட்டு அங்கு பார்வை மகசர் தயார் செய்த போது நானும் அசா.7 முருகன் முன்னிலையில் தயார் செய்த பார்வை மகசரில் சாட்சியாக இருக்க கேட்டுககொண்டதின்படியும் நானும் அசா.7ம் பார்வை மகசரில் கையொப்பம் செய்து விட்டு தற்போது எதிரியை காப்பாற்றும் நோக்கத்தில் இவ்வழக்கில் எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணை = இல்லை

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

...

IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM

Sessions Case No. ;SC.NO .47-20

Calender Case No. ;

Primary Register Case No;

Deposition of Witness for :Prosecution P.W 12

Defence

Court

Name : Thiru. Indiran

Father's Name :

Age :

Religion :

Calling :

Address :

Phone /Mobile No. :

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of 7th day of July, 2023.

Accused and his counsel present

முதல் விசாரணை =

நான் கடந்த 31.5.2023 அன்று காஞ்சிபர்ம மாவட்ட குற்றபிரிவில் கா.உதவி ஆய்வாளராக பணியில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் கடந்த 14.11.2019 அன்று பாலுசெட்டி கா.நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது நிலைய அலுவலில் இருந்தபோது பகல் 12 மணிக்கு அசா1 சண்முகம் வயது 32 நிலையம் ஆஜராகி

கொடுத்த அசா.ஆ1. புகாரை பெற்று பாலுசெட்டி சத்திரம் கா.நிலைய கு.எண்.491/2019 இதச பிரிவுகள் 294(பி) 307,506 (2) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து மேல் விசாரணைக்காக வேண்டி கா.ஆய்வாளர் பார்வைக்கு சமர்பித்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும். இது சம்மந்தமாக கா.ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை=

அசா.ஆ1 புகார் அ.சா.1 சண்முகம் கைப்பட எழுதி கொடுத்த புகார் கிடையாது என்றால் சரிதான். அந்த புகார் யாரால் தட்டச்சு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வது போல் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் புகார் எதுவும் தரவில்லை. கா.நிலையத்தில் வைத்து இவழக்கிற்காக வேண்டி புகாரை தயார் செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை = இல்லை